# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் செய்தி மடல்

செய்தி 19 மடல் 8 | ஆகஸ்ட் 2019 | ₹1.00

## அமெரிக்காவின் ஒக்லகாமா மாகாணப் பல்கலைக்கழக மாணவர்களும், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக மாணவர்களும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து வாழ்த்துபெற்றனர்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களை 03.07.2019அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கும் அமெரிக்காவின் ஒக்லகாமா மற்றும் வாஷிங்டன் மாகாணப் பல்கலைக்கழகங்களுக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கு ஐந்து வார காலப் பயிற்சிக்காக வருகைதந்துள்ள அமெரிக்காவின் ஒக்லகாமா மாகாணப் பல்கலைக்கழக மாணவர்களும், அமெரிக்காவின் வாஷிங்டன் மாகாணப் பல்கலைக்கழகத்திற்கு இரண்டு மாத காலப் பயிற்சிக்காகச் செல்ல உள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக மாணவர்களும் சந்தித்து வாழ்த்துபெற்றனர். இந்நிகழ்வில் மாண்புமிகு தமிழகக் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. உடுமலை கே. ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலர் திரு. க. சண்முகம் இ.ஆ.ப., தமிழக அரசின் கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறையின் அரசு முதன்மைச் செயலர் மருத்துவர் கே. கோபால் இ.ஆ.ப., தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன், பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பா. டென்சிங் ஞானராஜ், அமெரிக்காவின் ஒக்லகாமா மாகாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் லைனல் டாசன் ஆகியோர் உடனிருந்தனர்.

## இளநிலைப் பட்டப்படிப்பில் மாணவர் சேர்க்கை (2019–20)க்கான தரவரிசைப் பட்டியல் வெளியீடு



தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் வழங்கும் பி.வி.எஸ்சி. மற்றும் ஏ.எச்., பி.டெக். (உணவுத் தொழில்நுட்பம்), பி.டெக். (பால்வளத் தொழில்நுட்பம்), பி.டெக். (கோழியின உற்பத்தித் தொழில்நுட்பம்) ஆகிய பட்டப் படிப்புகளில் 2019–20ஆம் கல்வியாண்டில் மாணவர்கள் சேர்வதற்கான தரவரிசைப் பட்டியல், 03.07.2019அன்று சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் வெளியிடப்பட்டது. மாண்புமிகு தமிழகக் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. உடுமலை கே. ராதாகிருஷ்ணன் அவர்கள் தகுதி வாய்ந்த மாணவர்களின் தரவரிசைப் பட்டியலை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் தமிழக அரசின் கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறையின் அரசு முதன்மைச் செயலர் மருத்துவர் கே. கோபால் இ.ஆ.ப., தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன், பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பா. டென்சிங் ஞானராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.

## இளநிலைப் பட்டப்படிப்பில் மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு



தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் அளிக்கும் பி.வி.எஸ்சி. மற்றும் ஏ.எச்., பி.டெக். (உணவுத் தொழில்நுட்பம்), பி.டெக்.(பால்வளத் தொழில்நுட்பம்) மற்றும் பி.டெக். (கோழியின உற்பத்தித் தொழில்நுட்பம்) பட்டப் படிப்புகளுக்கான கலந்தாய்வு 25.07.2019 முதல் 27.07.2019 வரை நடைபெற்றது. மாண்புமிகு தமிழகக் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. உடுமலை கே. ராதாகிருஷ்ணன் அவர்கள், 26.07.2019அன்று நடைபெற்ற மாணவர் சேர்க்கைக்கான அனுமதிக் கடிதம் வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்று, பி.வி.எஸ்சி. மற்றும் ஏ.எச். பட்டப் படிப்பில் சேரத் தேர்வுசெய்யப்பட்ட முதல் 15 மாணவர்களுக்கு அனுமதிக் கடிதம் வழங்கித் தலைமையுரை ஆற்றினார். தமிழக அரசின் கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறையின் அரசு முதன்மைச் செயலர் மருத்துவர் கே. கோபால் இ.ஆ.ப. அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். இந்நிகழ்வில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன்,. பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பா. டென்சிங் ஞானராஜ் ஆகியோர் பங்கேற்றனர்.

## மருத்துவமனை மேலாண்மைக் குழுக் கூட்டம்




இருபத்தொன்பதாவது மருத்துவமனை மேலாண்மைக் குழுக் கூட்டம், பல்கலைக்கழகத்தின் சிகிச்சையியல் இயக்குநரகத்தால் 08.07.2019அன்று சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடத்தப்பட்டது. கூட்டத்திற்குத் தலைமை வகித்த பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி.பாலச்சந்திரன் அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார். சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கள் வரவேற்புரை ஆற்றி, சிகிச்சையியல் இயக்குநரகத்தின் தொழில்நுட்ப அறிக்கை அளித்தார். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் சிகிச்சைத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் மற்றும் மருத்துவமனை மேலாண்மைக் குழுவின் உறுப்பினர் செயலர் முனைவர் கே. குலசேகர் அவர்கள் வரும் ஆண்டிற்கான கூட்ட நிகழ்ச்சிக் குறிப்புகளைச் சமர்ப்பித்தார். முன்னாள் சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் ஆர். ஜெயபிரகாஷ், ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியின் மருத்துவத் துறையின் ஓய்வுபெற்ற பேராசிரியர் மற்றும் தலைவர் டாக்டர் எஸ். சிவகுமார், சென்னை, கால்நடைப் பராமரிப்பு மற்றும் மருத்துவச் சேவைகள் துறையின் கூடுதல் இயக்குநர் டாக்டர் ஜெ. ராஜகோபாலன், குழந்தை வாழ்விற்கான தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் அறக்கட்டளை உறுப்பினர் திருமதி சாந்தி ராஜசேகர், நாமக்கல் பட்டயக் கணக்கர் திரு. எல். விஜயன், திருநெல்வேலி, ஆர்வி இன்ஜினியரிங் உரிமையாளர் திரு. பி. ரேமண்ட் பெட்ரிக், சிறப்பு அழைப்பாளர்களான ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை ஈனியல் மற்றும் இனப்பெருக்கவியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எம். செல்வராஜு, திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை அறுவைச் சிகிச்சை மற்றும் ஊடுகதிரியக்கவியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எஸ். தர்மசீலன், ஒரத்தநாடு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை மருத்துவத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் பி. செல்வராஜ் ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்றனர். கடந்த ஆண்டுக் கூட்டத்திற்கான நிகழ்ச்சிக் குறிப்புகள் மதிப்பீடு செய்யப்பட்டன. கூட்ட முடிவில் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் ஜெ. ஜான் கிருபாகரன் அவர்கள் நன்றி கூறினார்.

## கால்நடை உற்பத்திக் குழுக் கூட்டம்

எட்டாவது கால்நடை உற்பத்திக் குழுக் கூட்டம் 26.07.2019அன்று சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்றது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் (பொ.) மற்றும் கால்நடை உற்பத்திக் குழுத் தலைவர் முனைவர் ஆ.வே. ஓம்பிரகாஷ் அவர்கள் கடந்த குழுக் கூட்டப் பரிந்துரையின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றிய அறிக்கை அளித்தார். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை உற்பத்தி மேலாண்மைத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவரும் கால்நடை உற்பத்திக் குழுவின் உறுப்பினர் செயலருமான முனைவர் தங்க. தமிழ்வாணன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். பல்கலைக்கழக ஆராய்ச்சி

நிலையங்களின் தலைவர்கள், கடந்த ஆண்டிற்கான பணி அறிக்கை சமர்ப்பித்தனர். கூட்டத்தில் புறநிலை வல்லுநர்களாகப் பங்கேற்ற ஹைதராபாத்தில் உள்ள இந்திய வேளாண் ஆராயச்சிக் கழகத்தின் கோழியின ஆராய்ச்சி இயக்கக இயக்குநர் முனைவர் ஆர்.என். சாட்டர்ஜி, சென்னை சவிதா மருத்துவக் கல்லூரிப் பதிவாளர் முனைவர் வி. தியாகராஜன் ஆகியோர் கருத்துரை வழங்கினர். மேலும், சென்னை மண்டலத் தமிழ்நாடு கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் உதவிப் பொது மேலாளர் மருத்துவர் எம்.எஸ். முருகேசன் அவர்களும் கூட்டத்தில் பங்கேற்றுக் கருத்துரை வழங்கினார்.

### கால்நடை நோய் ஆய்வுக் கூட்டம்

33ஆவது கால்நடை நோய் ஆய்வுக் கூட்டம், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் 26.07.2019அன்று நடைபெற்றது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். கால்நடை நலக் கல்வி மைய இயக்குநர் முனைவர் கோ. தினகர் ராஜ் அவர்கள் "2013 முதல் 2018 வரை பல்கலைக்கழகப் பண்ணைகளில் அவசரகால விலங்கின நோய் பாதுகாப்பு முறைகள்" குறித்து விளக்கிக்கூறினார். கூட்டத்தில் கால்நடை நோய் ஆய்வுக் கூட்டப் பணிகள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டுப் பல்கலைக்கழகப் பண்ணைகள், கால்நடைப் பண்ணை வளாகங்கள் மற்றும் துறைகளின்கீழ் செயல்படும் கால்நடைப் பிரிவுகளின் பணி விவரங்கள் ஆய்வு செய்யப்பட்டன. கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் (பொ.) முனைவர் ஆ.வே. ஓம்பிரகாஷ், விரிவாக்கக் கல்வி இயக்குநர்(பொ.) முனைவர் த. இராமசாமி, சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் சி. பாலசுப்பிரமணியன், ஓசூர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரி முதல்வர் முனைவர் கு. மணி, தமிழ்நாடு அரசின் கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவுகள் மற்றும் கோழியின நோய் கண்டறிதல் ஆய்வகங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்றனர்.

### புரிந்துணர்வு ஒப்பந்தம்

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கும் புனே, பெய்ஃப் மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அறக்கட்டளைக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம், 08.07.2019அன்று சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் செய்துகொள்ளப்பட்டது. ஐந்து ஆண்டிற்குரியதான இந்த ஒப்பந்தம் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பரிமாற்ற ஆய்வில் ஒன்றிணைந்து செயல்பட வழிவகுக்கும். புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் பல்கலைக்கழகத்தின் சார்பில் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பா. டென்சிங் ஞானராஜ் அவர்களும் பெய்ஃப் மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அறக்கட்டளையின் சார்பில் அதன் தலைவர் திரு. ஜி.ஜி. சோஹனி அவர்களும் கையொப்பம் இட்டனர்.

### சிகிச்சையியல் பயிற்சி

**வங்காள தேசத்தின் சட்டோகிராம் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்:** இப் பல்கலைக்கழகத்தின் 59 மாணவர்களுக்குச் "சிகிச்சையியல் தொடர்பான உள்ளிருப்புப் பயிற்சி" 19.06.2019 முதல் 19.07.2019 வரை அளிக்கப்பட்டது.



19.07.2019அன்று நடைபெற்ற பயிற்சியின் நிறைவு விழாவில் பங்கேற்ற பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி.பாலச்சந்திரன் அவர்கள் தலைமையுரை ஆற்றி, மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். பயிற்சி ஒருங்கிணைப்பாளர் மற்றும் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் சிகிச்சைத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் கே. குலசேகர் அவர்கள் பயிற்சி அறிக்கை அளித்தார். சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் ஜெ. ஜான் கிருபாகரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். கல்லூரியின் கல்விச் சிறப்புப் பிரிவுப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எஸ். கோமதிநாயகம் அவர்கள் நன்றி கூறினார்.

**அமெரிக்காவின் ஒக்லகாமா மாகாணப் பல்கலைக்கழகம்:** இப் பல்கலைக்கழகத்தின் ஆறு மாணவர்களுக்குச் "சிகிச்சையியல் தொடர்பான வெளிப்புறப் பயிற்சி" 19.06.2019 முதல் 21.07.2019



வரை அளிக்கப்பட்டது. பயிற்சியில் பங்கேற்ற மாணவர்களுக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் சான்றிதழ் வழங்கினார். இந்நிகழ்வில் சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் சி. பாலசுப்பிரமணியன், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் ஜெ. ஜான் கிருபாகரன், கல்லூரியின் கல்விச் சிறப்புப் பிரிவுப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எஸ். கோமதிநாயகம் ஆகியோர் பங்கேற்றனர்.

### சிறிய பிராணிகள் மருத்துவத்தில் நுண்ஒலி அலை வரைபடம்



பல்கலைக்கழகத்தின் நான்கு கால்நடை மருத்துவக் கல்லூரிகளில் இளநிலைப் பட்டம் பயிலும் நான்காம் ஆண்டு மாணவர்களுக்குச் "சிறிய பிராணிகள் மருத்துவத்தில் நுண்ஒலி அலை வரைபடம்" குறித்த இணையவழிக் கருத்துப்பகிர்வு நிகழ்ச்சி, காணொலிக்காட்சி மூலம் 27.07.2019அன்று சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் துவக்கிவைத்துச் சிறப்பு வீடியோ உரை ஆற்றினார். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் ஜெ. ஜான் கிருபாகரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். நிகழ்ச்சி அமைப்பாளர் மற்றும் சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.

பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பா. டென்சிங் ஞானராஜ் அவர்கள் விழா மலர் மற்றும் செறிவு வட்டு வெளியிட்டு, முதன்மையுரை ஆற்றினார். நிகழ்ச்சியின் இணை அமைப்பாளர் மற்றும் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் சிகிச்சைத் துறைப் பேராசிரியர் முனைவர் பி. ஸ்ரீதேவி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். நிகழ்ச்சியின் இணை அமைப்பாளர் மற்றும் கல்லூரியின் கால்நடை மருத்துவச் சிகிச்சைத் துறைப் பேராசிரியர் முனைவர் ஜெ. ஜெயராஜா அவர்கள் நன்றி கூறினார். நிகழ்ச்சியில் மொத்தம் 264 மாணவர்கள் பங்கேற்றனர்.

## துணைவேந்தர் பங்கேற்பு

- **நபார்டு வங்கியின் நிறுவன நாள்**

நபார்டு வங்கியின் 38ஆவது நிறுவன நாள் விழா, சென்னை ஹோட்டல் தாஜ் கிளப்பில் 13.07.2019அன்று நடைபெற்றது.



விழாவில் பங்கேற்ற பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

- **இந்தியக் கால்நடை மருத்துவச் சங்கத்தின் பன்னாட்டுக் கருத்தரங்கு**

இந்தியக் கால்நடை மருத்துவச் சங்கம்மூலம் புதுதில்லி, தேசிய வேளாண் அறிவியல் வளாகத்தில் 27.07.2019அன்று நடத்தப்பட்ட கால்நடை மருத்துவம் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்த பன்னாட்டுக் கருத்தரங்கில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் பங்கேற்றுக், “கால்நடை மருத்துவக் கல்விமீது சிறப்புக்கவனம்” எனும் தலைப்பில் விரிவுரை வழங்கினார். மேலும், “இந்தியாவில் கால்நடை மருத்துவத்தை வலுப்படுத்துதல்” எனும் அமர்வுக்கும் தலைமை வகித்தார்.

## மாணவர்களுக்கான பயிலரங்கு




பல்கலைக்கழகத்தின் பிரிவு 8 நிறுவனமான கால்நடை அறிவியல் தொடக்கநிலைத் தொழில் உருவாக்க அமைப்புமூலம் “கால்நடை அறிவியல் தொடக்கநிலைத் தொழில் உருவாக்க அமைப்பில் மாணவர்களுக்குத் தொழில்முனைதல் வாய்ப்புகள்” குறித்த பயிலரங்கு 19.07.2019அன்று நடத்தப்பட்டது. பயிலரங்கில் நாமக்கல் மற்றும் திருநெல்வேலியில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஓசூர் கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரி, சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரிகளைச் சார்ந்த 29 மாணவர்கள் பங்கேற்றனர். சென்னை, தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிலையத் துணை இயக்குநர் திரு. பி. மணிகண்டன் அவர்கள் தொழில்முனைவோர்க்குத் தமது நிலையம் வழங்கும் நிதியுதவிகளை எடுத்துரைத்தார். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் மாணவர்களிடையே உரையாற்றி, வெற்றிபெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார்.

## பயிலரங்கு



நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை மருத்துவச் சிகிச்சைத் துறைமூலம் பெரிய அசைபோடும் பிராணிகளில் பலவிதமான வயிறு மற்றும் குடல் சார்ந்த நோய்களைக் கண்டறிதல் பற்றிய பயிலரங்கு, 05.07.2019அன்று நடத்தப்பட்டது. ஹெப்பால் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை மருத்துவத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் பி.ஏ. உபேந்திரா அவர்கள் சிறப்பு விரிவுரை ஆற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன் அவர்கள் தலைமை வகித்தார். மேலும், 26.07.2019அன்று நடத்தப்பட்ட “பெரிய அசைபோடும் பிராணிகளில் நோய் கண்டறியும் நுட்பங்களில் ஏற்பட்டுள்ள அண்மைக்கால முன்னேற்றங்கள் மற்றும் கதழ்ஒலியைப் பயன்படுத்தும் முறை” பற்றிய பயிலரங்கில் 35 கால்நடை மருத்துவர்கள் பங்கேற்றனர். பயிலரங்கிற்குக் கல்லூரி முதல்வர் (பொ.) முனைவர் கே. பாலசுந்தரம் அவர்கள் தலைமை வகித்தார்.

## தர மேலாண்மைப் பயிற்சி

பல்கலைக்கழகத்தின் அடிப்படை அறிவியல் புலம்மூலம் “மேலாண்மை முறைகள் மற்றும் உள்தணிக்கை ISO/IEC 17025:2017” பற்றிய பயிற்சி, 15.07.2019 முதல் 18.07.2019 வரை சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்றது. பயிற்சியில் 24 பேர் பங்கேற்றனர். 18.07.2019அன்று நடைபெற்ற பயிற்சியின் நிறைவு விழாவில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் பங்கேற்றுத் தலைமையுரை ஆற்றிப் பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். தேசியத் தர அங்கீகார வாரிய இயக்குநர் முனைவர் என். வெங்கடேஸ்வரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடைப் பராமரிப்புப் புள்ளியியல் மற்றும்

கணினிப் பயன்பாட்டியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் மா. திருநாவுக்கரசு அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.



அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் ஜி. சரத்சந்திரா அவர்கள் நன்றி கூறினார்.

### கால்நடை மருத்துவர்களுக்குப் பயிற்சி

- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை மருத்துவச் சிகிச்சைத் துறை மூலம் "செல்லப்பிராணிகளில் ஏற்படும் இதயம் சார்ந்த நோய்களின் தற்போதைய கருத்துகள்" பற்றிய பயிற்சி, ஆந்திர மாநிலத்தைச் சார்ந்த 10 கால்நடை மருத்துவர்களுக்கு 19.07.2019 முதல் 21.07.2019 வரை நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் கே. பாலசுந்தரம் அவர்கள் பயிற்சிக்குத் தலைமை வகித்தார்.
- கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்மூலம் "பஞ்சுக் கழிவுகளைக் கால்நடைத் தீவனமாகப் பயன்படுத்துதல்" பற்றிய தொழில்நுட்பக் கருத்தரங்கு, கரூர் மாவட்டக் கால்நடை மருத்துவர்களுக்கு 23.07.2019 அன்று நடத்தப்பட்டது. கருத்தரங்கைக் கரூர் மண்டலக் கால்நடைப் பராமரிப்புத் துறையின் இணை இயக்குநர் மருத்துவர் கே.ராதாகிருஷ்ணன் அவர்கள் துவக்கிவைத்தார். பயிற்சியில் 55 கால்நடை உதவி மருத்துவர்கள் மற்றும் கால்நடைப் பராமரிப்புத் துறையின் துணை இயக்குநர்கள் பங்கேற்றனர்.

### செயல்திறன் மேம்பாட்டுப் பயிற்சி

- தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின் நிதியுதவியில் மேல்மருவத்தூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்மூலம் "கறவை மாட்டுப் பண்ணையம்" பற்றிய செயல்திறன் மேம்பாட்டுப் பயிற்சி, 20 கிராமப்புற இளைஞர்களுக்காக 01.07.2019 முதல் 05.07.2019 வரை திருவள்ளூரில் நடத்தப்பட்டது. பயிற்சியைத் திருவள்ளூர் மண்டலக் கால்நடைப் பராமரிப்புத் துறையின் இணை இயக்குநர்(பொ.) மருத்துவர் கே. ஸ்ரீதர்பாபு அவர்கள் துவக்கிவைத்தார். 05.07.2019 அன்று நடைபெற்ற பயிற்சியின் நிறைவு விழாவில் விரிவாக்கக் கல்வி இயக்குநர்(பொ.) முனைவர் த. இராமசாமி அவர்கள் தலைமையுரை ஆற்றிப் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார்.
- கரூர்; கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்மூலம் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின் நிதியுதவியில் "கறவை மாடு வளர்ப்பு" பற்றிய செயல்திறன் மேம்பாட்டுப் பயிற்சி, கரூர் மற்றும் நாமக்கல் மாவட்டங்களைச் சார்ந்த 23 கிராமப்புற இளைஞர்களுக்காக 01.07.2019 முதல் 05.07.2019 வரை நடத்தப்பட்டது. 05.07.2019 அன்று நடைபெற்ற பயிற்சியின் நிறைவு விழாவில் நாமக்கல் மண்டலக் கால்நடைப் பராமரிப்புத் துறையின் இணை இயக்குநர் மருத்துவர் பி. பொன்னுவேல் அவர்கள் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிழ் வழங்கினார்.
- விழுப்புரம், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்மூலம் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின் நிதியுதவியில் "கறவை மாடு வளர்ப்பு" பற்றிய செயல்திறன் மேம்பாட்டுப் பயிற்சி, 25 கிராமப்புற இளைஞர்களுக்காக 01.07.2019 முதல் 05.07.2019 வரை நடத்தப்பட்டது. பயிற்சியின் துவக்க விழாவில் விழுப்புரம் மண்டலக் கால்நடைப் பராமரிப்புத் துறையின் இணை இயக்குநர்(பொ.) மருத்துவர் டி. மோகன், கால்நடை இனப்பெருக்கம் மற்றும் பசுந்தீவன உற்பத்தித் துணை இயக்குநர்(பொ.) மருத்துவர் ராஜேந்திரன், கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவின் உதவி இயக்குநர் மருத்துவர் டி.எம். சாந்தி, கால்நடைப் பராமரிப்புத் துறையின் ஓய்வுபெற்ற துணை இயக்குநர் மருத்துவர் எம். கோபி ஆகியோர் பங்கேற்றனர்.

### பண்ணையாளர் பயிற்சி

கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்மூலம் கரூர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ஊரகத் தொழில்முனைவோர் பயிற்சி மைய நிதியுதவியுடன் "வெள்ளாடு வளர்ப்பு" பயிற்சி 15.07.2019 முதல் 26.07.2019 வரை நடத்தப்பட்டது. பயிற்சியில் கரூர் மாவட்டத்தைச் சார்ந்த 34 பண்ணையாளர்கள் பங்கேற்றனர். மேலும், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ஊரகத் தொழில்முனைவோர் பயிற்சி மைய இயக்குநர் திரு. ஜி. ரங்கநாதபிரபு, மாவட்ட முன்னோடி வங்கிப் பொது மேலாளர். திரு. ரவிசந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### தொழில்முனைவோர் மேம்பாட்டு நிகழ்ச்சி

திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பிரிவு மூலம் "கால்நடை மருத்துவ மாணவர்களுக்குத் தொழில்முனைவோர் மேம்பாடு" பற்றிய நிகழ்ச்சி, 10.07.2019 அன்று நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் ஜெ. ஜாண்சன் ராஜேஸ்வர் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். திருநெல்வேலி, அண்ணா பல்கலைக்கழக மண்டல வளாக முதல்வர் முனைவர் பி. சுரேஷ்குமார் அவர்கள் துவக்கவுரை ஆற்றினார். கல்லூரியின் கால்நடை உற்பத்தி மேலாண்மைத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் வெ. ரமேஷ் சரவணகுமார், திருநெல்வேலி தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிலைய ஒருங்கிணைப்பாளர் மற்றும் துணை இயக்குநர் டாக்டர் எஸ். சிலாஸ் சற்குணம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். நிகழ்ச்சியில் 180 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்கேற்றனர்.

### அக்ரி இண்டெக்ஸ் 2019 கருத்துக்காட்சி




கோயம்புத்தூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையமானது கோடுவெளி, உணவு மற்றும்

பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரி, மாதவரம் பால்பண்ணையில் உள்ள கால்நடைப் பண்ணை வளாகம் மற்றும் கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாடுசார் பரிமாற்றத்தளம், நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையம், ஈரோடு மற்றும் திருப்பூரில் உள்ள கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் ஆகியவற்றுடன் இணைந்து தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் சார்பில் கோயம்புத்தூர், கொடிசியா தொழில் கண்காட்சி வளாகத்தில் 12.07.2019 முதல் 15.07.2019 வரை நடைபெற்ற அக்ரி இன்டெக்ஸ் – 2019 கருத்துக்காட்சியில் பங்கேற்றது. புதுச்சேரி மாநில வேளாண் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ஆர். கமலக்கண்ணன் அவர்கள் கருத்துக்காட்சியில் இடம்பெற்ற பல்கலைக்கழக அரங்கைப் பார்வையிட்டார். கிட்டத்தட்ட 1.30 இலட்சம் விவசாயிகள் கருத்துக் காட்சியைப் பார்வையிட்டனர்.

### கண்டுணர் பயணம்

ஆத்மா திட்டத்தின் அங்கமான மாநில விரிவாக்கச் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் தருமபுரி, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்மூலம் நான்கு கண்டுணர் பயணம் மற்றும் இரண்டு பயிற்சிகள் நடத்தப்பட்டன. இவற்றில் 250 விவசாயிகள் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

### விலங்குவழிப் பரவும் நோய்கள் தினம் – 2019

- ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடைப் பொதுச் சுகாதாரம் மற்றும் நோய் நிகழ்வாய்வியல் துறைமூலம் உலக விலங்குவழிப் பரவும் நோய்கள் தினம், 05.07.2019அன்று கடைப்பிடிக்கப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் தி. சிவகுமார் அவர்கள் நிகழ்ச்சியைத் துவக்கிவைத்து, வண்ணம் தீட்டுதல் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார். தஞ்சாவூர், பொதுச் சுகாதாரத் துறை, காசநோய் ஆய்வக மேற்பார்வையாளர் திரு. டி. விஜயகுமார் அவர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்று உரையாற்றினர். நிகழ்ச்சியில் 80 ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்றனர்.
- திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடைப் பொதுச் சுகாதாரம் மற்றும் நோய் நிகழ்வாய்வியல் துறைமூலம் உலக விலங்குவழிப் பரவும் நோய்கள் தினம் 08.07.2019அன்று கடைப்பிடிக்கப்பட்டு, மாணவர்களுக்குப் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. திருநெல்வேலி, அரசு மருத்துவக் கல்லூரியின் சமூக மருத்துவத் துறையின் உதவிப் பேராசிரியர் டாக்டர் பி.எம். சிவா அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றுச் சிறப்புரை ஆற்றினார். கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் ஆர். ஸ்ரீதர் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்துப் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்.
- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடைப் பொதுச் சுகாதாரம் மற்றும் நோய் நிகழ்வாய்வியல் துறை சார்பில் விலங்குவழிப் பரவும் நோய்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி, 09.07.2019அன்று நாமக்கல், வேட்டாம்பாடி அரசினர் உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. நிகழ்ச்சியைக் கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன் அவர்கள் துவக்கிவைத்தார். நாமக்கல், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் (காசநோய்), துணை இயக்குநர் மருத்துவர் எஸ். கணபதி அவர்கள் தனிநபர் சுகாதாரம் மற்றும் விலங்குவழிப் பரவும் நோய்களைத் தடுத்தல் குறித்து விழிப்புணர்வு விரிவுரை ஆற்றினார். வேட்டாம்பாடி அரசினர் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியை திருமதி பெ. சிவகாமி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். நிகழ்ச்சியில் கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்கேற்றனர்.

### உலகப் புலிகள் தினம்

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் வனவிலங்கு அறிவியல் துறையில் உள்ள வனவிலங்கு மன்றம்மூலம் ''உலகப் புலிகள் தினம் 2019'', 30.07.2019அன்று கடைப்பிடிக்கப்பட்டது. இதற்கான நிகழ்ச்சியை அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் ஜி. சரத்சந்திரா அவர்கள் துவக்கிவைத்தார். கால்நடைப் பராமரிப்பு மற்றும் மருத்துவச் சேவைகள் இயக்ககத்தின் கூடுதல் இயக்குநர் டாக்டர் என்.எஸ். மனோகரன் அவர்கள் ''புலிகள் பாதுகாப்பு'' பற்றிச் சிறப்புரை ஆற்றினார்.

### விழிப்புணர்வு நிகழ்ச்சி

திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின்கால்நடைப் பராமரிப்பு மற்றும் விரிவாக்கக் கல்வித் துறைமூலம் நாட்டுக் கோழிகளில் இரத்தக்கழிச்சல் நோய்க்கு எதிராக வாய்வழிக் குருணைத் தடுப்பு மருந்து அளித்தல் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி, திருநெல்வேலி மாவட்டம், சொக்கட்டான்தோப்பில் 29.07.2019அன்று நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் ஜெ. ஜாண்சன் ராஜேஸ்வர் அவர்கள் நிகழ்ச்சியைத் துவக்கிவைத்தார். இந்நிகழ்ச்சி மூலம் 25 நாட்டுக்கோழிப் பண்ணையாளர்கள் பயன்பெற்றனர்.

### பணியாளர் சுகாதார முகாம்

திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் பணியாளர் மன்றம்மூலம் பணியாளர் சுகாதார முகாம், 24.07.2019அன்று நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர்(பொ.) மற்றும் பணியாளர் மன்றத் தலைவர் முனைவர் ஜெ. ஜாண்சன் ராஜேஸ்வர் அவர்கள் முகாமைத் துவக்கிவைத்தார். முகாமில் 130க்கும் மேற்பட்ட ஆசிரியர் மற்றும் இதர பணியாளர்கள் பங்கேற்றனர்.

### இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழக விருதுகள்



நாமக்கல், வேளாண் அறிவியல் நிலையத்தின் சிறந்த செயல்பாடு மற்றும் சாதனைகளை அங்கீகரிக்கும் வகையில், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் மண்டலம் 10கீழ் செயல்பட்டு வரும் வேளாண் அறிவியல் நிலையங்களில் சிறந்த வேளாண் அறிவியல் நிலையத்திற்கான ''பண்டிட் தீன்தயாள் உபாத்யாய் ராஷ்டிர க்ருஷி விக்யான் புரோஷஹான் புரஸ்கார்–2018'' விருது அளித்துச் சிறப்பிக்கப்பட்டது. இவ்விருதினைப் புதுதில்லி, தேசிய வேளாண் அறிவியல் வளாகத்தில் 16.07.2019அன்று நடைபெற்ற இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் 91ஆவது நிறுவன நாள் விழாவில் மாண்புமிகு மத்திய வேளாண் மற்றும் உழவர் நல அமைச்சர் திரு. நரேந்திரசிங் தோமர் அவர்களிடம் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் மற்றும் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலைய முதுநிலை அறிவியலாளர் மற்றும் தலைவர் முனைவர் என். அகிலா ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

16.07.2019அன்று நடைபெற்ற இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் 91ஆவது நிறுவன நாள் விழாவில் இந்திய வேளாண் ஆராய்ச்சி மற்றும் கல்வித் துறைச் செயலர் மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத் தலைமை இயக்குநர் முனைவர் திரிலோசன் மொகாபத்ரா அவர்களிடம் “ஹால்தார் இயற்கை



விவசாயி விருதினை”, நாமக்கல் மாவட்டம், நாமகிரிப்பேட்டை வட்டம், ஆரியகவுண்டன்பட்டியைச் சார்ந்தவரும் நாமக்கல், வேளாண் அறிவியல் நிலையத்தில் பயிற்சி பெற்றவருமான திரு. பி. சரவணன் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

## வேளாண் ஆராய்ச்சிக் கழகம் நடத்திய அனைத்திந்திய முதுநிலைப் பட்ட நுழைவுத் தேர்வில் பல்கலைக்கழக மாணவர்கள் சிறப்பிடம்

அண்மையில் புதுதில்லி, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் நடத்திய அனைத்திந்திய முதுநிலைப் பட்ட நுழைவுத் தேர்வில் பல்கலைக்கழகத்தின் 2013–2014ஆம் சேர்க்கைப் பிரிவைச் சார்ந்த 35 பட்டதாரிகள் தேர்ச்சிபெற்று, முதுநிலைப் பட்டப் படிப்புதவித்தொகை பெறுவதற்குத் தகுதிபெற்றுள்ளனர். இவர்களில் ஏழு பட்டதாரிகள் முதல் 10 இடங்களிலும், அவர்களில் இரண்டு பட்டதாரிகள் கால்நடை மருத்துவ அறிவியல் பாடப் பிரிவில் முதல் இரு இடங்களிலும் தேர்ச்சி பெற்றுள்ளனர். தேர்ச்சிபெற்ற 35 பட்டதாரிகளில் 18 பட்டதாரிகள் நாட்டின் முதன்மையான கால்நடை மருத்துவக் கல்வி நிலையங்களான இசாட் நகர், இந்தியக் கால்நடை மருத்துவ ஆராய்ச்சி நிலையம் மற்றும் கர்னால், தேசியப் பால்வள ஆராய்ச்சி நிலையங்களில் முதுநிலைப் பட்டம் பயில அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளனர்; 17 பட்டதாரிகள் பல்வேறு மாநிலக் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகங்களில் முதுநிலைப் பட்டம் பயில அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளனர். பல்கலைக்கழகத்திற்குப் பெருமை சேர்த்த இந்தப் பட்டதாரிகள் அனைவரையும் பல்கலைக்கழகம் வாழ்த்துகிறது. இந்தப் பட்டதாரிகளின் வெற்றிக்குத் துணைநின்ற அனைத்துப் பேராசிரியர்களையும் பல்கலைக்கழகம் பாராட்டுகிறது.

## புதிய கட்டடங்களின் திறப்பு விழா




நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் புதிதாகக் கட்டப்பட்ட கோழியின அறிவியல் துறையின் குஞ்சுப் பொரிப்பகம்–2, பால் மற்றும் இறைச்சிப் பொருட்கள் விற்பனை வளாகம், 22 கிலோ வோல்ட் /433 வோல்ட் துணை மின் நிலையத்துடன் கூடிய 500 கிலோ வோல்ட் ஆம்பியர் மின்மாற்றி, முதுகலைப் பட்ட மகளிர் விடுதி ஆகியவற்றைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் 30.07.2019அன்று திறந்துவைத்தார்.

## பேரிடர் காலங்களில் கால்நடை அவசர மீட்பு குறித்த பயிற்சி



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் பேரிடர் காலங்களில் கால்நடை அவசர உதவிக் குழுவும், புதுதில்லி, உலகக் கால்நடைப் பாதுகாப்பு அமைப்பும் இணைந்து, “பேரிடர் காலங்களில் கால்நடை அவசர மீட்பு” குறித்த பயிற்சியை 12.07.2019 முதல் 15.07.2019வரை நடத்தின. பயிற்சியில் கல்லூரியின் இளநிலைப் பட்ட நான்காமாண்டு (2015–16ஆம் சேர்க்கைப் பிரிவு) மாணவர்கள் 89 பேர் பங்கேற்றனர். 15.07.2019அன்று நடைபெற்ற பயிற்சியின் நிறைவு விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் ஜெ. ஜான் கிருபாகரன் அவர்கள் பயிற்சிபெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கி நிறைவுரை ஆற்றினார். பேரிடர் காலங்களில் கால்நடை அவசர உதவிக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி. மணிவண்ணன் அவர்கள் பயிற்சி அறிக்கை அளித்தார்.

## வேலைவாய்ப்புப் பயிற்சி

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை வணிக மேலாண்மைத் துறையும் பல்கலைக்கழக மாணவர் கலந்தாய்வு மற்றும் வேலைவாய்ப்புப் பிரிவும் இணைந்து “இந்திய ஆட்சிப் பணிகளில் வேலைவாய்ப்புகள்” குறித்த பயிற்சியை 12.07.2019அன்று நடத்தின. பயிற்சியில் கிங் மேக்கர்ஸ் ஐஏஎஸ் அகாடமி குழுவினர் விரிவுரை ஆற்றினர். திருமதி விஜேதா இ.கா.ப. அவர்கள் பயிற்சியில் பங்கேற்றுத் தமது அனுபவங்களை மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டார். மொத்தம் 91 மாணவர்கள் பயிற்சியில் பங்கேற்றனர்.

## ஒட்டுண்ணித் தொற்றுக்களைத் திரட்டுவதற்கு போல்டுஸ்கோப்பைப் பிரபலப்படுத்துதல்

- ஒசூர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரியில் செயல்பட்டு வரும் “தமிழ்நாட்டில் உள்ள வனவிலங்குகளில் ஒட்டுண்ணித் தொற்றுக்களைத் திரட்டுவதற்கு போல்டுஸ்கோப்பை ஒரு கருவியாகப் பயன்படுத்துதல்” எனும் அறிவியல் தொழில்நுட்பத் துறையின் நிதியுதவித் திட்டத்தின்கீழ், “போல்டுஸ்கோப்பின் பயன்பாட்டைப் பிரபலப்படுத்துதல்” குறித்த விரிவாக்க நிகழ்ச்சி, சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் வனவிலங்கு அறிவியல் துறையால் 24.07.2019அன்று நடத்தப்பட்டது. அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் ஜி. சரத்சந்திரா அவர்கள் நிகழ்ச்சியைத் துவக்கிவைத்து, மாணவர்களிடையே உரையாற்றினார். நிகழ்ச்சியில் பி.வி.எஸ்சி. மற்றும் ஏ.எச். பட்டம் பயிலும் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் 130 பேர் பங்கேற்றனர். இதே போன்ற நிகழ்ச்சி, வனம் / வனவிலங்கு

Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254
Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.

Licensed to post without prepayment No.TN/PMG(CCR)/WPP-708/2018-2020
REGISTERED No.TN/CC(S)DN/569/18-20

Posted on 30.08.2019 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 25th and 26th of every month

Printed and Published by Dr. K.N. Selvakumar, Director of Distance Education, Tamil Nadu Veterinary and Animal Sciences University, Old No. 327/New No. 485, Anna Salai, Nandanam, Chennai – 600035 on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University, Printed at University Printing Press, Mathur Road, Madhavaram Milk Colony, Chennai – 600051. Editor: Dr. K.N. Selvakumar, Ph.D.

நல மருத்துவர்களின் நன்மை கருதி, ஆனைமலை யானை முகாமில் 27.07.2019 மற்றும் 28.07.2019ஆம் தேதிகளில் நடத்தப்பட்டது. முகாமில் 21 யானைகள் பரிசோதிக்கப்பட்டு, உட்புற ஒட்டுண்ணித் தொற்றுக்கள் அடையாளம் காணப்பட்டு, அதற்கான சிகிச்சை முறைகள் பரிந்துரைக்கப்பட்டன. ஆனைமலை வன அலுவலர் திரு. நவீன் குமார்அவர்கள் முகாமில் பங்கேற்றார்.


- ஒசூர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரியில் 70 மாணவர்கள் பங்கேற்ற "போல்டுஸ்கோப்பின் பயன்பாட்டைப் பிரபலப்படுத்துதல்" நிகழ்ச்சி, 31.07.2019அன்று நடைபெற்றது. நிகழ்ச்சியைக் கல்லூரி முதல்வர் முனைவர் கு. மணி அவர்கள் துவக்கிவைத்தார். விரிவாக்கக் கல்வி இயக்குநர்(பொ.) முனைவர் த. இராமசாமி அவர்கள் சிறப்புரை ஆற்றினார். இதே போன்ற நிகழ்ச்சி, ஒசூர், எம்ஜிஆர் கல்லூரியின் 200 மாணவர்களுக்கும் நடத்தப்பட்டது.

### நாட்டுநலப் பணித் திட்டம்




ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் செஞ்சுருள் சங்கம் சார்பாக இரத்ததான முகாம் 18.07.2019அன்று நடத்தப்பட்டது. முகாமைக் கல்லூரி முதல்வர் முனைவர் தி. சிவகுமார் அவர்கள் துவக்கிவைத்தார். தஞ்சாவூர் மாவட்ட இரத்தப் பரிமாற்ற அலுவலர் மருத்துவர் த. அரவிந்த், ஒரத்தநாடு மருத்துவ அலுவலர் மருத்துவர் ச. இந்திரா ஆகியோர் முகாமில் பங்கேற்றனர். முகாமில் 51 மாணவர்கள் கலந்து கொண்டு இரத்ததானம் செய்தனர்.

### பணி ஓய்வு



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரிப் பொறியியல் பிரிவின் செயற்பொறியாளர் (கட்டடம்) திரு. வி. மோகன் 31.07.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 31.07.1961இல் பிறந்த இவர், 32 ஆண்டும் 03 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சாந்திநல்லா, செம்மறியாடு இனப் பெருக்க ஆராய்ச்சி நிலைய உடனாள் திருமதி ஏ. சரசு அவர்கள் 30.06.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 01.07.1959இல் பிறந்த இவர் 13ஆண்டும் 01 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் உறைவிடக் கால்நடைச் சுகாதாரப் பிரிவின் அடிப்படை ஊழியர் திரு. எஸ். மாணிக்கம் 31.07.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 05.07.1959 இல் பிறந்த இவர், 13 ஆண்டும் 02 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சாந்திநல்லா, செம்மறியாடு இனப் பெருக்க ஆராய்ச்சி நிலைய அடிப்படை ஊழியர் திருமதி பி.சீதா அவர்கள் 30.06.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 01.07.1959இல் பிறந்த இவர் 13ஆண்டும் 01 மாதமும் பணியாற்றியுள்ளார்.

## பதிப்புக் குழு

**முதன்மை ஆசிரியர்**
முனைவர் சி. பாலச்சந்திரன், துணைவேந்தர்
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

**ஆசிரியர்**
முனைவர் க.ந. செல்வக்குமார்
தொலைநிலைக் கல்வி இயக்குநர்

**உறுப்பினர்கள்**
முனைவர் தி.வ. மீனாம்பிகை
முனைவர் சி. மணிவண்ணன்
முனைவர் த. செந்தில்குமார்
மருத்துவர் அ. ஷ்யாம் பாபு
முனைவர் பா. மதுகேஸ்வரன்
முனைவர் ம. தங்கபாண்டியன்
மருத்துவர் கா.தீ. கவிதா